# D E P O S I T I O N O F W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.88/2024

**P.W**.6 (LW4)

| | |
|---|---|
| Name | : **திரு.சேகர்** |
| Father/Husband Name | : திரு,சுந்தரம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது லட்டூர் கிராமத்தில் குடியிருந்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் சுரேஷ்குமார், சுப்பிரமணி, இளங்காளி ஆகியோர் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்.**

**2) சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 7.00 மணியளவில் நான் கழிவறைக்கு சென்றுவிட்டு வரும் போது சாமிதுரையும், சுரேஷ்குமார் என்பவரும் சாமிதுரை வீட்டு வாசலில் தகராறு செய்துக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களை விலக்கிவிட்டுவிட்டு நான் எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். எதற்காக அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளும் சுரேஷ்குமாரும் தகராறு செய்துக் கொண்டிருந்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

நான் சம்பவத்தை கேள்விப்பட்டு தான் சென்றேன் என்றால் இல்லை. சாமிதுரை குடும்பத்திற்கும், சுரேஷ்குமார் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சுரேஷ்குமார் என்னுடைய ஊரை சேர்ந்தவர் என்பதால் சம்பவத்தை பற்றி எதுவும் தெரிந்துக் கொள்ளாமல் புகார்தாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.